<u>அ.வ.எண்.**70/2024** பி.வா.சா.**1 –** சுதா **15.07.2025**</u>

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

<u>மாலை 4.20 மணி முதல் 5.15 மணி வரை</u>

நான் இல்லதரசியாக உள்ளேன். எனக்கு திருமணம் ஆகி 28 வருடம் ஆகிறது. திருமணத்திற்கு பின்னிட்டு நான் எனது கணவருடன் ஒன்றாக வசித்து வருகிறேன். தற்போது நான் வாதிகளுடன் வசிக்கவில்லை என்றும், தனியாக வசித்து வருகிறேன் என்றும் சொன்னால் நான் என் பெற்றோர்களுடன்தான் ஒன்றாக குடியிருந்தோம், என் தகப்பனார் இறந்த பிறகு தனியாக சென்றுவிட்டோம். நீங்கள் தனியாகதான் திருமணத்திற்கு பின்னிட்டு வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கை மஞ்சுளாவிற்கு திருமணம் ஆகி 13 வருடம் ஆகிறது. எனது தங்கை மஞ்சுளா அவரது கணவருடன் மேட்டுப்பாளையத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கும், எனது தங்கை திருமணத்திற்கும் பின்னிட்டுதான் 2 ஆம் வாதி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது கணவர் அரசியல் கட்சியில் கிளை செயலாளராக உள்ளார் என்றால் சரியல்ல. 24.10.2002 ஆம் தேதியில் எனது குடும்ப சொத்தை பாகக்கறார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் பாகக்கறார் செய்துள்ள சொத்து எனது பாட்டி காளியம்மாளுக்கு

பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 11.10.1956 ஆம் தேதி மேற்படி சொத்தை காளியம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, அதற்று முன்பு என்ன நடைபெற்றது என்பது தெரியாது, அதற்கு பின்னிட்டு நாங்கள் பாகக்கறார் செய்து கொண்டோம். காளியம்மாள் கிரையம் பெற்ற சொத்தை கடந்த 30.10.1996 ஆம் தேதியில் ஒரு கிருஷ்ணன் என்பவருக்கு விடுதலை ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் தென்வடல் 60 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 60 அடிக்கு வடக்கே உங்களுக்கு பூர்வீக சொத்து கிடையாது என்று சொன்னால் என் பாக சொத்திற்கு வடக்கே பூர்வீக சொத்து கிடையாது. சர்வே எண்.799/12B க்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு இல்லையென்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.799/12B என்பது அரசு நத்தம் புறம்போக்கு என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை அசல் வழக்கு எண்.345/2024 ல் C அட்டவணை சொத்து நீங்கள் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். நீங்கள் மேற்சொன்ன சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக அதற்குரிய மூல ஆவணங்கள் மற்றும் சட்ட ஆலோசனை பெற்று நீங்கள் வாங்கினீர்கள் என்று சொன்னால்

சரிதான். சொத்து விலைக்கு வாங்குவதற்கு முன்பாக நீங்கள் சர்வேயர் வைத்து அளந்து பார்த்தீர்களா என்றால் இல்லை. உங்களின் தகப்பனாரின் தகப்பனார் மாணிக்ககவுண்டர் மகன் ராமசாமி என்று சொன்னால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்கிய சொத்து நாராயணசாமி மகன் ராமசாமி என்பவரிடம் இருந்துதான் என்றால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்கிய சொத்து காலியிடம் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்கிய இடத்திற்கு சர்வே எண்.799/13 (பழைய சர்வே எண்.702) சர்வே நெம்பருக்கு மட்டும் கட்டுப்பட்டது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.799/13 என்பது எனது பாட்டா ராமசாமி பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.799/13 ன் விஸ்தீர்ணம் 146 ச.மீ. என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்சொன்ன பட்டா வேறு யார் பெயருக்கும் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். ஈசநத்தம் கிராமத்தில் சர்வே எண்.799/13 என்ற இடத்திற்கு நாராயணசாமி மகன் ராமசாமிக்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லையென்று சொன்னால் ஞாபகம் இல்லை. உங்களுக்கு கிரையம் கொடுத்த நாராயணசாமி மகன் ராமசாமிக்கு எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் தவறு இருந்தால் அதை மூல ஆவணங்கள் கொண்டுதான் சரிசெய்யவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பாகக்கறார் பத்திரத்திலும்,

கிரையப்பத்திரத்திலும் சர்வே எண் தவறாக உள்ளது என்ற விபரத்தை 2003 ஆம் ஆண்டில் தெரிந்து கொண்டீர்களா என்றால் நாராயணசாமி மகன் ராமசாமியிடம் இருந்து கிரையம் பெற்ற பின்புதான் தெரிந்துகொண்டேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி தவறினை 2003 ஆம் ஆண்டில் தெரிந்துகொண்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. பாகக்கறார் பத்திரத்தில் பிழைதிருத்தல் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தில் பிழைதிருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 1996 ஆம் ஆண்டில் உங்கள் பெரியப்பா கிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ள விடுதலை ஆவணம் பிழைதிருத்தம் செய்யவில்லை என்றால் என் பெரியப்பா செய்திருப்பார், எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் நீங்கள் கடந்த 2022 ஆம் ஆண்டில் பிழைதிருத்தம் பத்திரம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே செய்துள்ளோம். உங்கள் கிரையப்பத்திரத்தில் உமாராதா என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. 2002 ஆம் ஆண்டு பாகக்கறார் பத்திரத்தில் எனது கணவர் பழனிச்சாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் பத்திரததை பார்த்தால்தான் சொல்ல இயலும். 2002 ஆம் ஆண்டு பாகக்கறார் பத்திரத்தில் கிழமேல் 7 அடி அகலம், தென்வடல்

60 அடி நீளம் என்ற பாதைக்கு தெற்கே 4 அடி பஞ்சாயத்து பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன 7 அடி அகலமுள்ள பாதைக்கு செல்லவேண்டுமெனில் 4 அடி அகலமுள்ள பஞ்சாயத்து பாதை வழியாகதான் செல்ல இயலும் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன 7X60 சொன்ன உங்கள் பூர்வீக நிலத்தில் உள்ள பாதை என்றால் சரிதான். மேற்படி பாதைக்கு கிழக்கே கிருஷ்ணன் என்பவர் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிருஷ்ணன் என்பவர் வீடும் பூர்வீக சொத்தில்தான் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. 7 அடி அகலமுள்ள பாதைக்கு கிழக்கே மேற்படி கிருஷ்ணன் உயிருடன் உள்ளபோதே வீடு கட்டி வசித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். தற்போதுவரை மேற்படி வீட்டில் உமாராதா என்பவர் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். உமாராதா குடியிருந்து வரும் வீடுதான் நீங்கள் பாகக்கறார் செய்துகொண்ட A அட்டவணை சொத்து என்று சொன்னால் அது நானும், எனது தகப்பனாரும் கட்டிய தார்சு வீடு ஆகும். உங்கள் பெரியப்பா கிருஷ்ணன் என்பவரும், உமாராதாவும் ஒரு ராமசாமிக்கு கிரையம் செய்ததாக சொல்லும் சொத்து கற்பனையானது என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணன் என்பவரும், உமாராதா என்பவரும் ராமசாமிக்கு விற்ற சொத்தில்தான் உமாராதா குடியிருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் 2022 ஆம் ஆண்டில் கிரையம் பெற்ற சொத்தில் சர்வே

எண்.799/13 ல் தென்வடல் 60 அடி நீளம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தின் விஸ்தீர்ணம் 184 ச.மீ., என்று சொன்னால் 1980 ச.அ. காலிமனை ஆகும். சர்வே எண்.799/13 க்கு கட்டுப்பட்டது 1520 சதுரடி தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கிரையம் வாங்கிய சொத்தில் 400 சதுரடி பற்றக்குறை இருப்பதால் வாதி குடியிருக்கும் வீட்டை அபகரிக்க முயற்சிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண்.799/12B க்கு கட்டுப்பட்டது என்று சொன்னால் குடியிருக்கிறார்கள், மேற்படி வீட்டில் எங்களுக்கும் பாத்தியம் உள்ளது. நீங்கள் கிரையம் பெற்ற சொத்தில் வில்லங்கம் இருப்பதை தெரிந்துகொண்டு நீங்கள், உமாராதா, ராமசாமி ஆகியோர்கள் ஒரு பொய்யான கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.799/12B என்பது உங்கள் தகப்பனார் பாலசுப்பிரமணிக்கு தனிப்பட்ட முறையில் சுவாதீனம் அனுபவத்தில் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் 440 சதுரடிதான் என் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார், மற்ற சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் வந்ததாகும். நீங்கள் 2002 பாகம் பிரித்தபிறகு நீங்கள் வேலி போட்டுக்கொண்டுள்ளீர்களா என்றால் இல்லை. ஈசநத்தம் கிராமத்தில் முத்தம்மாளுக்கு சுமார் 5 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகம்

இல்லை. அந்த தெருவில் உள்ள 40 வீடுகளுக்கும் வடக்கு எல்லை முத்தம்மாள் இடம்தான் என்று சொன்னால் எங்கள் இடத்தில்தான் உள்ளது. ஈசநத்தம் அரசு நத்தம் புறம்போக்கில் எனது தகப்பனாருக்கு அனுபவ சுவாதீனம் உள்ள சொத்து உள்ளதால்தான் அவரது உயிலில் நான்கு சொத்தாக காண்பித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல, என் அப்பா உயில் எழுதவில்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கில் உள்ள A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல. C அட்டவணை சொத்து என்பது பூஸ்துதியிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே 2 ஆம் வாதி நாட்ராயன் ஆஸ்பெட்டாஸ் போட்டு வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, நான் கிரையம் வாங்கி பிறகுதான் ஆஸ்பெட்டாஸ் வீடு போட்டுள்ளார். அ.வ.எண்.70/2024 மற்றும் அ.வ.எண்.344/2024 வழக்கில் வாதி கோரியபடி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.345/2024 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**2 ஆம் பிரதிவாதிக்கு குறுக்கு விசாரணை இல்லை.**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.